RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# பாலை நிலப் பண்பாட்டு உருவாக்கம்

## க. குமரகுருபரன் [அ] *

[அ] தமிழ்த்துறை, மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி, பசுமலை, மதுரை-625004, தமிழ்நாடு, இந்தியா

# The Cultural Formation of the Palai Landscape

**K. Kumarakurubaran [a, *]**

[a] Department of Tamil, Mannar Thirumalai Naicker College, Madurai-625004, Tamil Nadu, India

*Corresponding Author: gurusaru86@gmail.com

**ABSTRACT**

The geographical landscape of ancient Tamilakam was traditionally classified into five ecological regions (*Ainthinai*), each associated with a distinct mode of life, social organization, and cultural practices. Every landscape possessed its own characteristic environment and code of conduct. Among these, the Palai landscape occupies a unique position. The *Tolkappiyam* describes it as "Naduvanathu" (the intermediate region) and "Naduvu Nilai Thinai" (the common or transitional landscape). These descriptions indicate that *Palai* was not regarded as an independent geographical region but rather as a condition that emerged when the fertile landscapes of Kurinji and Mullai underwent transformation due to extreme climatic conditions such as drought and intense heat. Since the *Palai* landscape does not possess a separate geographical identity, it is understood as an ecological transformation shaped by natural environmental changes. The lifestyle, occupations, values, and cultural practices of the people associated with the *Palai* landscape evolved in response to these harsh conditions, demonstrating the close relationship between geography and human culture. The way of life of the *Palai* people reflects adaptation, endurance, courage, and resilience in the face of environmental challenges. This article examines the cultural formation of the *Palai* landscape by exploring how geographical conditions influenced the social life, customs, and cultural identity of its inhabitants. It highlights the dynamic relationship between ecology and culture in Sangam literature and demonstrates how the *Palai thinai* embodies the adaptive cultural traditions of the ancient Tamils.

**Keywords:** Palai Landscape, Cultural Formation, Tolkappiyam, Sangam Literature

## முன்னுரை

தமிழகத்தின் நிலப்பகுதி ஐந்து வகையாக பகுக்கப்பட்டுள்ளது. ஐவகைத் திணைகளின் நிலப்பகுதி ஒவ்வொன்றும் தனிப்பட்ட ஒழுக்க முறையுடன் இயங்கக்கூடியவையாகும். அவற்றில் பாலை என்பது 'நடுவணது' என்றும் 'நடுவு நிலைத் திணை' என்றும் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. இவ்விரண்டு சொற்றொடர்களும் பொதுத்திணை என்ற பொருளுடையவை. தொல்காப்பியர் ஏனை நான்கு திணைகளுக்கும் நிலம் குறிக்கப்பட்டுள்ளமையைக் கூறுவதால், பாலைத் திணை அவற்றுக்குப் பொது என்பது குறிப்பான் உணர்த்தப் பெறுகின்றது. அத்தன்மையில் தனித்த வேறு நிலம் இல்லாத திணையாக பாலைத்திணைக் கருதப்படுகிறது. இயற்கை மாற்றங்களின் தன்மையில் இந்நிலம் உருப்பெருகிறது. பாலைத்திணையின் வாழ்விடமாக கொண்ட மக்களின் பண்பாட்டினை விளக்கும் வகையில் இக்கட்டுரை அமைகின்றது. மக்களின் வாழ்வியல் பண்பாடு என்பது நிலவியல் அமைப்பிற்கு ஏற்ப மாற்றம் பெரும் என்பது உண்மையே. அத்தன்மையில் பாலைத்திணையின் பண்பாட்டினை ஆராயும் வகையில் இக்கட்டுரை அமைகின்றது.

## கருதுகோள்

- பாலைத்திணை மற்ற நிலவியல் அமைப்பிலிருந்து வேறுபட்டது.
- பாலைத்திணையின் வாழ்வியல் முறை என்பது அம்மக்களின் வாழ்வியல் சூழலை அடிப்படையாக கொண்டு அமைகின்றது.
- பாலைப் பண்பாடு இயற்கை சூழலுடன் மிக நெருங்கிய தொடர்புடையது.
- பாலைத்திணை மக்களின் தொழில் "ஆறலைக்கள்வர்கள்" வழிப்போக்கர்களை அலற தாக்கி கொள்ளையிடுதல். குறிஞ்சி, முல்லை நில மக்களின் தொழிலில் ஒரு வகை சாயல் காணப்படுகிறது.

ஆகியவைக் கருதுகோளாக கொண்டு கட்டுரை அமைகின்றது.

## பாலையின் நிலவியல்

தொல்காப்பியர் ஐந்து திணைகளில் பாலைத்திணைக்கு மட்டும் நிலம் வகுக்கப்படாமல் பொழுதுகள் மட்டும் வகுத்துள்ளார்.

'நடுவண் ஐந்திணை நடுவண தொழியப்

படுதிரை வையம் பாத்திய பண்பே" (தொல்.அகத். நூ: 2)

எனக் குறிப்பிடுவதனால் பாலை திணைக்கு நிலமில்லை என்பது தெளிவாகிறது. ஐந்து திணைகளை வரிசைப் படுத்துகின்ற பொழுது முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல் என்றே அமையும். இந்நூற்பாவில் தொல்காப்பியர் பாலை எனும் சொல்லாட்சியைப் பயன்படுத்தாது மட்டும் அல்லாமல் அகத்திணையியல் முழுமையும் பயன்படுத்தாது நடுவணது, நடுவுநிலை திணை… என்றே பாலைத் திணையைக் குறிப்பிடுகிறார். எனவே பாலைத்திணைக்கு மற்றொரு பெயராக நடுவண் திணை என்றே குறிப்பிடலாம். ஆனால் தொல்காப்பியர் உரிப்பொருளை வரிசைப்படுத்தும் பொழுது புணர்தல் பிரிதல் இருத்தல் எனக் குறிப்பிட்டுப் பாலைக்குரிய உரிப்பொருளை நடுவில் வைத்துப் பேசுவதின் நோக்கம் புணர்தலுக்குரிய குறிஞ்சி நிலத்திற்கும் இருத்தலாகிய முல்லை நிலத்திற்கும் இடைப்பட்ட நடுமண் (நிலம்), இடைப்பட்ட நடுவண் திணைக்கு நிலமாம் என்பதை உய்த்துணர வைக்கின்றார் தொல்காப்பியர்.

ஐந்திணைக்கு நடுவிலும் குறிஞ்சி, முல்லைக்கு நடுவிலும் நடுவணது திணையாகியப் பாலையைக் குறிப்பிடுவதைக் கண்டுணர்ந்த இளங்கோவடிகள் ஐந்திணைக்கு நடுவிலும் அதாவது முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல் என்பதை முல்லையும் குறிஞ்சியும் பாலை என்றும், புணர்தல் பிரிதல் இருத்தல் என்பதை குறிஞ்சிக்கும் முல்லைக்கும் இடைப்பட்டது பாலை என்றும் உணர்ந்த இளங்கோவடிகள்,

'முல்லையும் குறிஞ்சியும் முறைமையிற் திரிந்து

நல்லியல் பிழந்து நடுங்குதுயர் உறுத்துப்

பாலை என்பதோர் படிவம் கொள்ளும்" (சில, காடு, வரி: 64-66)

என முல்லையாகிய காடுகாண் காதையிலேயே இதைக் குறிப்பிடுவதைக் காணலாம்.

பாலை என்பது ஒருவகை மரமாகும். இம்மரம் குறிஞ்சியாகிய மலைநிலத்திலும் முல்லையாகிய காட்டிலும் வளரக்கூடிய தன்மை உடைய மரமாக உள்ளது. பாலைமரமாகும். மலைநிலத்திலும் காட்டிலும் உள்ள மற்ற செடி, கொடி மரங்கள் பெரும்பாலும் வேனில் காலத்தில் தளர்ச்சியடைந்து இருக்கும் பொழுது இம்மரம் மட்டும் வளர்ச்சியடைந்து காணப்படும். அதனாலேயே இருநிலத்தையும் குறிப்பிட தொல்காப்பியர் "பாலை" என்றொரு மரத்தைத் தேர்ந்தெடுத்தார். "பாலை" என்பதற்கு நிலம் இன்றேனும் வேனிற்காலம் பற்றி வருதலின் அக்காலத்துத் தளிரும் சினையும்

வாடுதலின்றி நிற்பது பாலை என்பதோர் மரம் உண்டாகலின் அச்சிறப்பு நோக்கிப் பாலை என்று குறிப்பிட்டாதாக இளம்பூரணர் எடுத்துரைக்கிறார்.

பாலை நிலம் என்பது முல்லை நிலமாகிய காடும், குறிஞ்சி நிலமாகிய மலையும் பாலை நிலமாகும் என்பதே பல்வேறு அறிஞர்களின் கருத்தாக உள்ளது. 'சுரமும் காடும் மழை வளங்காணாது வறண்ட மலைப்பகுதியும் மேய்ச்சல் நிலப்பகுதியும் பழந்தமிழர்களால் பாலை எனப்பட்டன எனத் தனி நாயகம் அடிகளார் குறிப்பிடுகிறார். மழை இல்லாமல் வறட்சியுற்ற மலையும் காடும் பாலை எனப்படும் என மு.வரதராசனார் மற்றும் பாலையானது காட்டுநிலத்தின் சார்பைப் பெரிதும் மலைநிலத்தின் சார்பைச் சிறிதும் பெற்றுத் தோன்றுவதாகும் என மு.அருணாசலம்பிள்ளை மற்றும் பாலை என்பது வேனிற்காலத்தே நீர் வளமற்று வரண்டு கிடக்கும் பகுதியைச் சுட்டும் என அ.அ.மணவாளன் ஆகிய தமிழாய்ந்தோர் கூற்று உற்றுநோக்கத்தக்கன.

தொல்காப்பியமும், சங்க இலக்கியமும் பாலைநிலம் ஒரு தனிநிலமாகக் காட்டாமல் மலை, காடு ஆகிய கூட்டுநிலமாகவே காட்டப் பெறுவதால் அக்காலத்திலும் கூட தனியான ஒரு பாலைநிலம் இல்லை என்பதை அறியமுடிகிறது. 'பாலைக்குத் தனிநிலம் இல்லை, களவு, கற்பு என்ற இருவகைக் கைக்கோளுக்கும் பொதுவாகியது பாலைத்திணை என்பது புலப்படுகிறது.

## பாலையின் முதற்பொருள் பண்பாடு

நடுவுநிலைத் திணையாகிய பாலைக்கு வேனில் காலத்தையும் பின்பனி காலத்தையும் பெரும்பொழுதாக வகுத்துள்ளார் தொல்காப்பியர்.

"நடுவுநிலைத் திணையே நண்பகல் வேனிலொடு

முடிவுநிலை மருங்கின் முன்னிய நெறித்தே" (தொல். அகத். நூ:11)

எனறு வேனில் காலத்தையும், 'பின்பனி தானும் உரித்தென மொழிப" (தொல். அகத். நூ:12) என பின்பனிகாலமாகிய பனிகாலத்தையும் நடுவுநிலை திணையாகிய பாலைக்கு உரிய காலம் என்பார். வேனில்காலமும் பின்பனிகாலமும் பாலைத் திணைக்கே உரியவை

"வேனில் நண்பகல் பின்பனி என்றிவை

பான்மையின் உரிய பாலை தனக்கே" (நம்பி, நூ:14)

என்று நம்பியகப்பொருள் குறிப்பிடுவதை அறியலாம். வேனில்காலம் என்பது இளவேனில், முதுவேனில் ஆகிய இருவகைப்படும். இளவேனில் என்பது சித்திரையும் வைகாசியுமாகும். முதுவேனில் என்பது ஆனியும் ஆடியுமாகும். இந்நான்கு மாதங்களும் வேனில் காலமாகும். இதையே 'இளவேனிலாவது சித்திரைத் திங்களும் வைகாசித் திங்களும் முதுவேனிலாவது ஆனித் திங்களும் ஆடித்திங்களும்" என்பார் இளம்பூரணர்.

இந்நான்கு மாதங்களுக்கும் முன்னால் வரக்கூடிய மாதம் மாசியும் பங்குனியும் ஆகும். இதை 'வேனிலாகிய சித்திரை முதலிய நான்கிற்கு முன் பின்பனியாகிய மாசியும் பங்குனியும் தொடர்ந்ததென்று கூறினார்" என்பார் நச்சினார்க்கினியர். தொல்காப்பியர் ஐந்து திணைக்கும் பின்பனிகாலம், வேனில் காலம், கார்காலம், கூதிர்காலம், முன்பனிகாலம் என ஐந்து பருவகாலங்களையே வகுத்துள்ளார். தொல்காப்பியத்திற்குப் பின்வந்த இலக்கண நூலான மாறனகப்பொருளின் ஆசிரியரான திருக்குருகைப்பெருமாள்கவிராயர் வேனில் காலத்தை இளவேனில், முதுவேனில் எனப் பிரிந்து அறுகாலமாக்கியுள்ளார். இளவேனில் காலத்தை வசந்தகாலம் என்கிறது தொன்னூல் விளக்கம். காலங்களைப் பருவங்களாகக் குறிப்பிட்டத் தொல்காப்பியர் அப்பருவங்களுக்குரிய மாதங்களைக் குறிப்பிடவில்லை எனலாம். தொல்காப்பியர் குறிப்பிட்ட பருவங்களுக்கு உரையாசிரியர்களே மாதங்களைக் குறிப்பிட்டுச் செல்கின்றனர் என்பதை அவர்கள் உரைகளின் வழி அறியமுடிகின்றது. நிலவியல் அடிப்படையில் காலம் தோன்றினாலும் காலத்தின் அடிப்படையிலேயே நிலம் சிறப்பைப் பெறுகிறது எனும் அடிப்படையில் பாலை நிலம் தோன்றுகிறது.

இதை 'முதல் நான்கு திணைகளும் நிலத்தின் அடிப்படையாகக் கொண்டும் ஐந்தாவது திணையான பாலை காலநிலை மாற்றத்தை அடிப்படையாகக் கொண்டும் வகுக்கப்பட்டன" எனக் குறிப்பிடுகிறார் அம்மன்கிளி முருகதாஸ். கோடைகாலமான பின்பனி, வேனில் காலத்தில் தாம் அன்புளங் கொண்ட மனைவியைப் பிரிந்து சென்ற தலைவனின் துன்பநிலையினையும் அவனையே நினைத்து இல்லிலிருக்கும் தலைவியின் துயரநிலையினையும் எடுத்துரைப்பதற்கு ஏற்ற சூழல் இக்காலச் சூழலேயாகும். 'பிரிந்து சென்ற தலைவனைக் குறித்த பாடல்களில் எல்லாம், புலவர்கள் கடுங்கோடையையே அதனைக் கூறப் பொருத்தமான பின்புலமாகத் தேர்ந்துள்ளனர். ஆனால் பிரிவுற்றிருக்கும் தலைவியின் துயரைச் சித்திரிக்கையில் அச்சூழலின் அவலத்தை எடுத்துக்காட்ட அவர்கள் மழைக்காலத்தையோ குளிர்காலத்தையோ (கார், கூதிர்) பனிக் காலத்தையோ வேனிற் காலத்தையோ பொருத்தமான பின்னணியாகத் தேர்ந்துள்ளனர்" எனக் காலத்தின் கருத்தினை எடுத்துரைக்கிறார் தமிழண்ணல்.

## பாலையின் பொழுது

வேனில்காலத்தில், நடுவுநிலைத் திணையாகிய பாலைக்கு பகலின் நடுப்பொழுதே சிறுபொழுதாகும். அதனாலேயே தொல்காப்பியர்,

'நடுவுநிலைத் திணையே நண்பகல் வேனிலொடு" (தொல். அகத். நூ:11)

என நண்பகலை வேனில்காலத்து நண்பகல் என்றார். இதன் அடிப்படையிலேயே பின்வந்த இலக்கண நூலான முத்துவீரியமும், 'நண்பகல் வேனில் நடுத்திணைக் குரிய (முத்து, அக, நூ:19) எனக் குறிப்பிடுகிறது. இதனால் வேனில் காலத்திற்கே நண்பகல் உரியது என்பதை அறியமுடிகிறது. பின்பனி காலத்திற்கு நண்பகல் பொருந்தாததாலே தொல்காப்பியமும், முத்துவீரியமும் பின்பனிக்குக் குறிப்பிடவில்லை என்பதை அறியலாம். இதையே 'பின்பனிக்கு நண்பகல் துன்பஞ் செய்யாதென்பதூஉம் அதற்குச் சிறுபொழுது வரைவில வென்பதூஉங் கூறிற்று" என்பார் நச்சினார்க்கினியர். வேனில் காலத்து நண்பகலே தலைவன் தலைவியரின் காதல் உணர்வை பெருக்கி உடன்போக்கைச் செய்து கவலை கொள்ளச் செய்கிறது. 'வெம்மை வளம்மிக்க சுரமும், அச்சுரத்துத்தாரின் காதற்சுரத்தையும் கவலைக் கொதுப்பையும் பெருக்கவல்லவை உள்ளக் கொதிப்பை நிலக்கொதிப்பும் காலக்கொதிப்பும் காட்டுவன" என்பார் வ.சுப.மாணிக்கம்.

சித்திரை, வைகாசி ஆகிய இரு திங்களும் இளவேனில் காலம் என்றும், ஆனி, ஆடி, ஆகிய இரு திங்களும் முதுவேனில் காலம் என்றும் குறிப்பிடுவர். நண்பகல் இருவகை வேனிலுக்கும் உரியது என்றாலும் இளவேனில் காலத்திற்கே சிறப்புக்குரியதாகக் கொள்ளலாம். ஏனென்றால் இளவேனில் காலமாகிய சித்திரைத் திங்களின் 5ஆம் நாள் நண்பகல் வேளையில் பாலைமரம் பூக்கத் தொடங்குகிறது. அதாவது மலர்கிறது… என்பதை ஆய்வாளர் களாய்வில் நேரில் கண்டுணர்ந்த உண்மையாகும். நண்பகல் பாலைக்கு நண்பகல்… என்பதை உணர்ந்த பண்டைப் புலவர்கள் பாலைக்கு நண்பகலைச் சிறுபொழுதாக வகுத்திருப்பது எவ்வளவு பொருத்தமாக உள்ளது என்பதை அறியமுடிகின்றது. மேற்குறிப்பிட்ட தகவல்கள் அடிப்படையில் சங்க இலக்கியப் பாடல்களில் பாலைத்திணையின் முதற்பொருள் அமைவாக சுரம், கானம், ஆர்இடை அத்தம், இடை, முரம்பு (வன்னிலம்), களரி, கடம், வறண்டகாடு, புறவு, வறனிலாக் குன்றம், காய்ந்த மலை, காய்ந்த குன்று, வெங்காடு, அருங்கவலை, வெம்பு, அருஞ்சுரம், களர்நிலம், வெம்பியகடம், அருங்கானம், அழுவம், கள்ளியம்காடு, வெஞ்சுரம், கடறு, நீரில் ஆறு, நனந்தலை, பொறி (வன்னிலம்), வெம்மலை வேனில், என்றூழ், (கோடை), இளவேனில் வெயில், பின்பனி, நண்பகல் ஆகியவற்றின் தன்மையே சுட்டப்பட்டுள்ளன.

## பாலையின் கருப்பொருள்

கருப்பொருள் பற்றித் தொல்காப்பியம் தெய்வம் முதலாக யாழின் இறுதியாகத் தொகுத்துச் சொல்லிருக்கிறதே தவிர அதைப் பகுத்தோ, விரித்தோ கூறவில்லை. இந்நூலிற்குப் பின் வந்த

இலக்கண நூல்களும் உரைகளுமே பாலைத்திணைக்குரிய கருப்பொருள் பற்றிப் பகுத்தும், விரித்தும் பேசுகின்றன. முல்லையும் குறிஞ்சியும் காலத்தால் அதன் உருவம் மாறி பாழ்பட்டு பாலையாகக் காட்சியளிப்பதாக உள்ளது. அதனால் இதனை, “காலநிலைப் பாலை” என்றே கூறலாம்.

காலத்தால் நிலம் மாறியதாலே அந்நிலக் கருப்பொருளும் உருமாறியக் கருப்பொருளாகக் காட்சியளிக்கின்றது. இவ்வுரு மாறிய முல்லை, குறிஞ்சிக்குரிய கருப்பொருளே பாலைக்குரிய கருப்பொருளாக உள்ளது எனலாம். இதைப் ‘பாலைக்கு நிலம் ஓதாது வேனிற்காலமும் நண்பகலும் ஓதினமையானும் எனப் பிற சான்றோர் செய்யுள் அகத்து வருதலானும் இந்நிலங்களில் வேனிற்காலத்து நிகழ்வன, கருப்பொருளாகக் கொள்ளப்படும்” (தொல்.அகத்.இளம்.உரை, ப:18) என்று குறிப்பிடுகிறார் இளம்பூரணர்.

முல்லைக்குரிய கருப்பொருளும் குறிஞ்சிக்குரிய கருப்பொருளுமே பாலைக்குரிய கருப்பொருள் என்பதை, ‘பாலை தனிநிலமின்மையின் மாமரம் முதலிய குறிஞ்சி முல்லைக்குரியன திரிந்து வரும். ஆனால் யாழ் அவ்வாறு குறிஞ்சி யாழும் முல்லை யாழும் வாராமல் பாலையாழ் ஒன்று சிறப்பாகவே வரும் என்க. பாலையாழ் - பாலைப்பண்” என ஆ.சிவலிங்கனார் குறிப்பிடுவதாலும் பாலைக்குரிய கருப்பொருளை அறியமுடிகின்றது. முல்லை, குறிஞ்சியுள் உள்ள கருப்பொருள்கள் வலிமையிழந்த மரம், செடி, கொடி, விலங்கினங்களாக உள்ளன. இவற்றை நச்சினார்க்கினியர், ‘பாலைக்கு உணா, ஆறலைத் தனவுஞ் சூறை கொண்டனவும், மா, வலியழிந்த யானையும் புலியுஞ் செந்நாயும், மரம், வற்றின இருப்பையும் ஓமையும், உழிஞையும் ஞெமையும், புள், கழுகும் பருந்தும் புறாவும், பறை, சூறை கோட்பறையும் நிரை கோட்பறையும், செய்தி, ஆறலைத்தலுஞ் சூறைகோடலும், யாழ், பாலையாழ் பிறவுமென்றதனால் பூ, மராவுங்குராவும் பாதிரியும், நீர் அறுநீர்க் கூவலுஞ் சுனையும், ஊர், பறந்தலை” எனக் குறிப்பிடுவதனால் பாலைக்குரிய கருப்பொருள்களை அறியமுடிகின்றது.

## பாலையின் உரிப்பொருள் - பிரிவு

தொல்காப்பியர் பல்வேறான பிரிவுகள் பற்றிக் குறிப்பிடுகிறார். “ஓதல், பகை, தூது, காவல், பொருள், உடன்போக்கு” அவ்வாறு குறிப்பிட்டாலும் தலைமகன் தலைமகள் பிரிவாகப் பொருட்பிரிவும் உடன்போக்கிறல் தோழி, பாங்கன் போன்ற உறவினர்களைப் பிரிதலுமாக இரண்டு வகைப்படும் என்பார் தொல்காப்பியர்,

“இருவகைப் பிரிவும் நிலைபெறத் தோன்றலும்

உரியதாகும் என்மனார் புலவர்” (தொல். அகத். நூ: 13)

எனக் குறிப்பிடுகிறார். இருவகைப் பிரிவும் உரியதாகும்… என்பதை உரியாகும்… எனக் கொண்டால் பாலைக்கு உரிப்பொருளாகப் பொருள்பிரிவும் உடன்போக்கும் ஆகிய இருவகைப் பிரிவாகும் எனக் கொள்ளலாம். இவ்விருவகை பிரிவே பாலைத்திணைப் பாடலில் காணமுடிகிறது. இவற்றை மேலும் உரையாசிரியராகிய இளம்பூரணர் குறிப்பிடும்பொழுது, “இருவகைப் பிரிவான தலைமகளைப் பிரிதலும் தலைமகளை உடன்கொண்டு தமர்வரைப் பிரிதலும் நிலைபெறத் தோன்றலும் பாலைக்குரிய பொருளாம் என்று கூறுவார்” . பாலைத்திணைக்கு இவ்விருவகைப் பிரிவைத் தவிர வேறு வகைப் பிரிவுகளைப் புலனெறி செய்யவில்லை என்று கூறலாம். “வேட்டை மேற்சேறலும், நாடுகாணச் சேறல் முதலிய எனவும் பாலையாகப் புலனெறி வழக்கஞ் செய்யாமையுணர்க” எனக் குறிப்பிடுகிறார் மு.அருணாச்சலம் பிள்ளை.

தலைவன் தலைவியைப் பின்பனி காலத்துப் பிரிந்து பொருள்தேடி வந்து இளவேனில் காலத்தில் சந்தித்தலும் அவ்வாறு சந்தித்தபிறகு திருமண முயற்சி கைகூடாததால் வேனில் காலத்தில் தலைவியை உடன்கொண்டு போதலும் நிகழ்ந்திருக்கலாம். “இது முதிர்வேனிற் பிரிந்தோர் கார்காலத்து மீண்டு வந்து கூடலும், பின்பனிக் காலம் பிரிந்தோர் இளவேனிலில் கூடலும் மரபென்பதை விளக்குகிறது” எனச் சோமசுந்தர பாரதியார் கூற்றை ஆ.சிவலிங்கனார் எடுத்துரைப்பதால் உணரலாம். எனவே பாலைப் பாடலுக்கு உரிப்பொருள், பொருள்பிரிவும் உடன்போக்கும் ஆகும் எனலாம். இதை, “பாலைப் பாடலின் ஒழுக்கம் பிரிதலும் ஒழுக்கம் பிரிதலும் உடன்போக்கும் எனினும் முல்லையிற்

போல தலைவி, தலைவன் வருவானே என இரங்குதலும் தலைவன் தலைவியை நினைந்து இரங்குதலும் காணப்படுகின்றன” எனப் பாலைக்குரிய ஒழுக்ககம் பற்றிக் குறிப்பிடுகிறார் அம்மன்கிளி முருகதாஸ் மேலும், “தலைவி தலைவனுடன் செல்லும் உடன்போக்கைப் பாலை என்பர்” எனக் குறிப்பிடுகிறார் வ.சுப.மாணிக்கம்.

தலைவனும் தலைவியும் சேர்ந்துதானே உடன்போக்கு மேற்கொள்கிறார்கள் பிறகு எவ்வாறு பிரிவாகும் என்பாரின் கூற்று பொருத்தமற்றதாக உள்ளது. உடன்போக்கில் தலைவனும் தலைவியும் ஒன்றாக இருந்தாலும், உடன்போக்கு எனும் உரிப்பொருளுக்கு உறுதுணையாக இருந்த தோழியையும் தோழிக்கு உறுதுணையாக இருந்த தாயாரையும், கிளி, ஊர் போன்ற கருப்பொருள் சூழலையும் அவள் இருந்த இடமான முதற்பொருள் சூழலையும் பிரிந்து செல்கின்றாள். “பிரிவுக்குரிய பாலைத்திணைக் குரியதாக உடன்போக்குக் கூறப்பட்ட கருத்து குறித்து ஆழ்ந்து சிந்தித்தல் தக்கதாகும். தலைவன் தலைவி இருவரும் உடன்போக்கில் செல்வது பிரிவாகாது எனினும் தலைவி தன் பெற்றோரையும் தோழியாரையும் ஊரையும் விட்டுப் பிரிகிறாள். எனவே அவள் உள்ளத்தில் ஒரு பிரிவு உணர்வு உள்ளது” என்பதைத் தமிழண்ணல் குறிப்பிடுவதால் அறியமுடிகின்றது. உடன்போக்கு மணமும் பெற்றோரின் சம்மதத்துடள் நடக்கும் திருமணமும் இரண்டிலுமே தலைவிக்கு பிரிவே. ஏனென்றால் இருவகை மணத்திலுமே பெற்றோரையும் உற்றோரையும் பிரிந்து தலைவன் வீட்டில் தலைவி தங்குவது என்பது அன்றும் இன்றும் தமிழர் மரபாக உள்ளது. இதுவே தமிழ் இலக்கிய புலநெறி மரபாகவும் உள்ளது. இக்கருத்தின் அடிப்படையிலேயே உடன்போக்கை பிரிவு எனலாம்.

தொல்காப்பியர் “இருவகைப் பிரிவு பற்றிக் கூறுவது 1) தலைவன், தலைவியை விட்டுப் பின்பனியில் பொருளுக்காகப் பிரிதலும், 2) தலைவி உடன்போக்குக்கு உறுதுணையாக இருந்து தோழியை வேனிலில் பிரிதலுமாம். இருவரும் இருஉருவமாக சேர்ந்திருந்தாலும் உடலளவிலும், உள்ளளவிலும் வேறுபட்டே நிற்கச் செய்வது காலச்சூழலும் கருப்பொருள் சூழலுமேயாகும். “காலையும் மாலையும் நண்பகலன்ன கடுமை கூரச் சோலை தேம்பிக் கூவன் மாறி நீரும் நிழலும் இன்றி, நிலம் பயந்துறந்து புள்ளும் மாவும் புலம்புற்று இன்பமின்றித் துன்பம் பெருகுவதொரு காலமாதலின் இன்பத்திற்கு இடையூறாகிய பிரிவிற்கு நண்பகலும் வேனிலுஞ் சிறப்புடைய ஆயின” என நச்சினார்க்கினியர் குறிப்பிடுவதனாலும் உடன்போக்குப் பிரிவு பற்றி அறியமுடிகின்றது.

பொருள்பிரிவு தலைவனுக்கே உரியது எனக்கூறலாம். இதைத் தொல்காப்பியர் குறிப்பிடும் பொழுது, “பொருள்வயின் பிரிதலும் அவர்வயின் உரித்தே” (தொல். அகத். நூ. 35) எனக் குறிப்பிடுகிறார். பொருள் பிரிவு என்பது திருமணத்தைக் குறிக்கும் உடன்போக்குக்கு முன்னதாகிய பின்பனி காலத்தில் ஏற்படும். இவற்றை பாலையின் பொருள்வயிற் பிரிவு திருமணத்தின் முன்னும் நிகழ்ந்தது பின்னும் நிகழ்ந்தது என்பார் அம்மன்கிளி முருகதாஸ். சங்க இலக்கிய பாலைப் பாடல்களில் பொருள் பிரிவுகள் பற்றி மிக அதிகமான பாடல்கள் பாடப்பட்டுள்ளன. அவை தலைவன் பின்பனி காலத்தில் பொருள் தேடச் சென்றதாகவே உள்ளன.

“பனிஇருங் குன்றம் சென்றோர்க்குப் பொருளே” (ஐங். பா.எண்.337)

“பனிபடு நாளே பிரிந்தனர்” (குறுந். பா.எண்.104)

ஐங்குறுநூற்றில் நின்பொருளே என்றும் குறுந்தொகையில், “கேடில் விழுப்பொருள் தருமார் காடிறந்தோர்” எனவும் நற்றிணை, “செய்பொருட்கு அகன்றனர்” என்பதையும் அகநானூறு, சென்றுதரு பொருட்டு எனப் பொருள் பிரிவுகள் பற்றிப் பாலைப் பாடல்கள் குறிப்பிடுவனவற்றால் அறியலாம். இவை தவிர மேலும் கூற்றுகளில் பொருள்பிரிவு பற்றி, பொருள் முற்றி வந்த தலைமகன், பொருள் முற்றி மறுத்தரா நின்றான். பொருள் வலிக்கப்பட்டுப் பிரிந்த தலைமகன், பொருள் வலித்த நெஞ்சு… எனக் கூற்று வழியிலும் காணமுடிகின்றது. இவ்வாறு பொருள்பிரிவும் உடன்போக்குப் பிரிவுமே பாலைப்பிரிவில் அதிகம் பேசப்படுகின்றன. இவையே பிரிவு பற்றிய உரிப்பொருளாகும். இவ்விருவகைப் பிரிவும் தலைவனும் தலைவியும் தம்முள் நிகழ்த்தும் உரையாகும்.

## முடிவுரை

முல்லையும் குறிஞ்சியும் திரிந்து பாலைக்குரிய நிலவடிவமாக இருந்தாலும் அந்நிலங்களுக்குரிய உரிப்பொருள்களை இருத்தலையும் புணர்தலையும் மறைமுகமாகச் சிறிது சார்ந்தும் பெரிதும் வெளிப்படையாகப் பொருள்பிரிவும் உடன்போக்கும் உள்ளன என்பதை அறியமுடிகின்றது. சிறிது சார்ந்திருத்தல் என்பது முல்லையில் தலைவி பிரிந்திருத்தலைப் போலவே பாலைத் தலைவியும் பிரிந்திருக்கிறாள் எனவும் குறிஞ்சியில் புணர்தல் என்பது தலைவன் தலைவி சேர்ந்திருத்தலைக் குறிப்பதைப் போல பாலையான உடன்போக்கு என்பதில் தலைவனும் தலைவியும் சேர்ந்தே உள்ளனர் என்பது புலப்படுகிறது.

பாலைத்திணையின் பண்பாடு அதன் முதற், கரு, உரிப்பொருட்களின் கட்டமைப்பில் வெளிப்படுகின்றது. பொருளதிகாரம் கட்டமைக்கும் இவை எவ்வாறு பண்பாடாகும்? என்பது தொடக்கத்திலே எழுந்தது. எனினும் பாலை மக்களின் வாழ்வியல் முறையினை வகுத்த தொல்காப்பியம் முதல் மற்ற இலக்கணங்கள் இலக்கியத்திலிருந்து இலக்கணம் வந்தது போன்று மக்களின் வாழ்வியலிருந்தே இவை தோற்றம் பெற்றன என்பது புலனாகின்றது.

பாலைத்திணை பிற இருதிணைகளின் மாற்றம் என்பது உண்மையே. அங்கு வாழ்ந்த மக்கள் இயற்கை மாற்றத்தை அப்படியே ஏற்றனர் என்பது புலனாகின்றது. வாழ்வியல் சூழலுக்கு ஏற்ப தொழிலினை மாற்றி அமைத்து வாழ்ந்தனர் என்பது புலனாகின்றது. தீராத பஞ்சம் ஏற்பட்ட காலங்களில் மக்கள் கூட்டம் கூட்டமாக பிழைப்பு தேடி வேறு இடங்களைத் தேடி செல்வது என்பது காலங்காலமாக நடந்து கொண்டுதான் உள்ளது. எந்நிலையிலும் என் வாழ்விடத்தையும் வாழ்வியலையும் நாங்கள் இழக்க மாட்டோம் என்ற ஒரு கூட்டத்தின் உரத்த சத்தமே பாலைத்திணையின் பண்பாடு என்பது கட்டுரை வழி தெளிவாகின்றது.

## References

தொல்காப்பியம் - ஆ.சிவலிங்கனார்,.

சங்கமரபு - தமிழண்ணல்

சிலப்பதிகாரம் - இளங்கோவடிகள்

கலித்தொகை ஓர் ஆழ்வாய்வு - நா. ஆறுமுகம்

பதிற்றுப்பத்து - ராஜ்கௌதமன்

அற்றைநாட் காதலும் வீரமும் - க.ப.அறவாணன்,

சங்கக் கவிதையாக்கம் மரபும் மாற்றமும் - அம்மன்கிளிமுருகதாஸ்.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License